# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**අංක 14,918—1970 අගෝස්තු 7 වැනි සිකුරාදා—1970.8.7**

14,918 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு ஓகத்து மாதம் 7 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித் தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனம் .. .. | — | விலைக்கட்டளைகள் .. .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | 443 | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. | — |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. .. | — |
| நீதிச் சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் .. | — | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | 444 | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | 477 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | 444 | மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. .. | 444 | "மதுவரிச் சட்ட" அறிவித்தல்கள் .. .. | — |


### மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும்

*1970 இன் இல. 227*

எண் : டி/விஎல்/17/ஏ (iv)

*தரைப்படை—சி. வி. எல்.—அதி உத்தமராம் மகாதேசாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட மாற்றுச் சேவை*

*தரைப்படையின் தொண்டர் படையின் கீழ்க்குறிப்பிடப்பட்ட அலுவலர் 1970 ஆம் ஆண்டு யூலை மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் நான்கு மாத காலத்திற்கு தரைப்படையின் நிரந்தரப் படையில் மாற்றுச் சேவை புரிதலை அதி உத்தமராம் மகாதேசாதிபதி அவர்கள் அங்கீகரித்தலிற் களிப்படைந்துள்ளார்.*

*தற்காலிக மேஜர் கங்காணி தந்திரி இந்திரசிறி சோமபால த சில்வா, சி.சி.சி.*

*அதி உத்தமனுரின் ஆணைப்படி*

ஏ. ஆர். ரத்னவேல்,
பதில் நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு.
*1970, யூலை 23.*

8–89

*1970 இன் இல. 228*

எண் : டி.23/ஆர்.ஈ.சி.பி/169

*இலங்கை அரச ஆகாயப்படை—அதி உத்தமராம் மகாதேசாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறல்*

*கீழ்க்குறிப்பிடப்பட்ட அலுவலர் 1970 ஆம் ஆண்டு நவெம்பர் 1 ஆம் திகதியிலிருந்து இலங்கை அரச ஆகாயப்படையிலிருந்து இளைப்பாறுகிறார் :*

*குறூப் கப்ரின் பிரேமரத்ன குணசிங்க வல்பிற்ற (01010)—பரிபாலனம்.*

*அதி உத்தமனுரின் ஆணைப்படி*

ஏ. ஆர். ரத்னவேல்,
பதில் நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு.
*1970, யூலை 24.*

8–90

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

*அரசாங்க அச்சகப் பகுதி,*
கொழும்பு,
*1969 ம் ஆடு திசெம்பர் மீ 14 ந் உ.*

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
*அரசாங்க அழுத்தகன்.*

## மற்றைய நியமனங்களும் பிறவும்

1970 இன் இல. 229

பா 4/சாவி 3/17, பா 4/சாவி 10/8

நீதிமன்றங்கள் கட்டளைச்சட்டம்

82 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

(6 ஆம் அத்தியாயமான) நீதிமன்றங்கள் கட்டளைச் சட்டத்தின் 82 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, நீதி அமைச்சர், ஜுசே மரியா ஜயமான ஆகிய யான்—

1. அசுரமுனி ஆகிலிஸ் த சில்வா வைத்தியரத்தின அவர்களைக் கழுத்துறை நீதிநிருவாக மாவட்டத்திற்காகவும்,

2. யட்டகம ஆராச்சிகே எமானிஸ் த சில்வா அவர்களை நுவரேலியா நீதிநிருவாக மாவட்டத்திற்காகவும்,

சமாதான நீதிவான்களாகச் செய்யப்பட்ட நியமனங்களை உடனடியாக இத்தால் நீக்குகின்றேன்.

ජේ. ආර්. ජයමාන්න,
நீதி அமைச்சர்.

நீதி அமைச்சு,
கொழும்பு, 1970 யூலை 29 ஆந் நாள்.

8-202/2

---

1970 இன் இல. 230

பா 4/சாவி 4/31, பா 4/சாவி 20/72.

நீதிமன்றங்கள் கட்டளைச்சட்டம்

82 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

(6 ஆம் அத்தியாயமான) நீதிமன்றங்கள் கட்டளைச் சட்டத்தின் 82 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, நீதி அமைச்சர், ஜுசே மரியா ஜயமான ஆகிய யான்—

1. வழக்கறிஞர் கேபட் மக்ஸ்வெல் ஜயவர்த்தன அவர்களை நீர்கொழும்பு நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும், உத்தியோகத் தொடர்பற்ற நீதிவானொருவராகவும்,

2. அப்புக்குட்டி சுப்பிரமணியம் அவர்களை யாழ்ப்பாணம் நீதி நிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவ ராகவும்,

இத்தால் நியமிக்கின்றேன்.

ජේ. ආර්. ජයමාන්න,
நீதி அமைச்சர்.

நீதி அமைச்சு,
கொழும்பு, 1970 யூலை 29 ஆந் நாள்.

8-202/1

---

1970 இன் இல. 231

நீதி அமைச்சரின் நியமனங்கள்

(20 ஆம் அத்தியாயமான) குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் 120 ஆம் பிரிவின் கீழ், மதிப்பிற்குரிய நீதி அமைச்சர்—

இல. பி 4/எச்எம்பி 22/13.

திரு. ஜயவீர முதியன்ஸேலாக ஏகநாயக்காவை இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள மாரப்பனை கிராம சபைப் பகுதிக்கான திடீர் மரண விசாரணை அதிகாரியாக 16.7.1970 முதல் நியமித்துள்ளார்.

நிகால் ஜெயவிக்கிரமா,
நீதி அமைச்சின் நிரந்தரச் செயலாளர்.

நீதி அமைச்சு,
கொழும்பு, 1970 யூலை 30 ஆந் நாள்.

8-202/3

---

1970 இன் இல.

1970 இன் இல. 232

1950, யூலை மாதம் 14 ம் தேதிய 10,123 ஆம் இலக்கக் கசெற்றில் வெளியிடப்பட்ட பொருள் கோடற் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 2) 10ஆ என்னும் விதியின் கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், பொது நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் நிரந்தரச் செயலாளர் பின்வரும் நியமனத்தைச் செய்திருக்கிறார் என்பதைப் பொது மக்களின் கவனத்திற்கு இதன்மூலம் அறியத்தரப்படுகின்றது :—

மாத்தறை நிருவாக மாவட்டத்தின் அதிகார பூர்வமான பதில் அரசாங்க அதிபர் ரீ. தேவேந்திர அவர்கள் தனது சொந்தக் கடமைகளுடன் மாத்தறை நிருவாக மாவட்டத்தின் பிரதிப் பிசுக்காலாகவும், மாத்தறை நிருவாக மாவட்டத்தின் பாழ்பொருள் பெறும் உத்தியோகத்தராகவும், மாத்தறைச் சிறைச்சாலைக் கண்காணிப்பாளராகவும், மாத்தறை நிருவாக மாவட்டத்தின் சுங்கச்சேர்ப்பாளராகவும், 1970, யூலை மாதம் 6 ஆம் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரைக்கும் கடமைபுரிய.

டபிள்யூ. ஆர். பீ. திலகரத்ன,
நிரந்தரச் செயலாளருக்காக.

1970 யூலை மாதம் 22 ந் வ.
பொது நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டு
அலுவல்கள் அமைச்சு,
ரொறிங்ரன் சதுக்கம்,
கொழும்பு 7.

8-105

---

## பதிவாளர் நியமனங்களும் பிறவும்

1970 இன் இல. 233

கீழ் குறிக்கப்பட்ட நியமனங்கள் என்னால் செய்யப்பட்டுள்ளன.

பதிவாளர் சேவையில், III ந் தர பதிவாளராகவிருக்கும் சீ. எச். குணவர்தன அவர்கள், 1970 மே 15 ந் திகதி தொடக்கம் கொழும்பு காரியாலயத்தில் வேலை செய்யும் கொழும்பு பரிபாலன மாவட்டத்தின் மேலதிகக் காணிப் பதிவாளராகவும்,

பதிவாளர் சேவையில் III ந் தர பதிவாளராகவிருக்கும் எம். பீ. டீ. சில்வா அவர்கள், 1970 யூன் 1 ந் திகதி தொடக்கம் மாத்தறை காரியாலயத்தில் சேவை செய்யும் மாத்தறை பரிபாலன மாவட்டத்தின் காணிப்பதிவாளராகவும் மேலதிக மாவட்டப் பதிவாளராகவும்,

பதிவாளர் சேவையில் III ந் தர பதிவாளராகவிருக்கும் இ. எல். சுதசிங்க அவர்கள், 1970 யூலை 1 ந் திகதி தொடக்கம் பலப்பிட்டிய காரியாலயத்தில் சேவை செய்யும், காலி பரிபாலன மாவட்டத்தின் மேலதிக காணிப்பதிவாளராகவும் மேலதிக மாவட்டப் பதிவாளராகவும்.

பதிவாளர் நாயகத்தின் அலுவலகம்,
கொழும்பு 1,
1970 ம் ஆண்டு யூலை மீ 24 ந் வ.

ஜெ. சமரசேகரா,
பதிவாளர் நாயகம்,

8-100

---

## அரசாங்க அறிவித்தல்கள்

1967 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க
துறைமுக சரி ஒப்பீட்டு பாதுகாப்புச் சேவைக்
கூட்டுத்தாபனச் சட்டம்

1967 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கத் துறைமுக சரி ஒப்பீட்டு பாதுகாப்புச் சேவைக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 7 (1) ஆம் பிரிவின்கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், கப்பற் போக்குவரத்து, சுற்றுலாப் பிரயாண அமைச்சர், இடம்பிட்டியே ருள்ளாகே புஞ்சிபண்டா குணதிலக்க களுகல்ல ஆகிய நான், திரு. சீ. எகொடகேவாகே அவர்களை 1970 யூலை 8 ஆந் திகதியிலிருந்து துறைமுக சரி ஒப்பீட்டு பாதுகாப்புச் சேவைக் கூட்டுத்தாபனப் பணிப்பாளர் சபையின் உறுப்பினராக இத்தால் நியமிக்கின்றேன்.

இந் நியமனம் மேற்குறிப்பிடப்பட்டுள்ள சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவுகட்குட்பட்டதாகும்.

பி. பீ. ஜீ. களுகல்ல,
கப்பற் போக்குவரத்து, சுற்றுலாப்
பிரயாண அமைச்சர்.

கொழும்பு,
1970, யூலை 8.

8-129

**1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் செய்சட்டம்**

**தேசிய அதிட்டச்சீட்டுச் சபை**

1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கச் செய்சட்டத்தின் 11 (அ), 20 ஆகிய பிரிவுகளின் கீழ் தேசிய அதிட்டச்சீட்டுச் சபையினல் ஆக்கப்பட்டதும் அச் செய்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினல் அங்கீகரிக்கப்பட்டதுமான விதிகள்.

சீ. ஏ. குறே,
நிரந்தரச் செயலாளருக்காக,
நிதி அமைச்சு.

கொழும்பு,
1970, யூலை மாதம் 26 ஆந் தேதி.

விதிகள்

1970 ஆம் ஆண்டு பெப்புருவரி 5 ஆந் திகதியிட்ட 14,892 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1967 ஆம் ஆண்டின் தேசிய அதிட்டச் சீட்டுச் சபை (இல. 2) விதிகள் "ஜாதிக சம்பத" என்ற சொல்லுக்குப் பதிலாக "மக்கள் சம்பத்து" என்ற சொல்லினல் பிரிவு 2(11) லும் பிரிவு 4 இலும் அப்பிரிவின் கீழுள்ள 1, 2, 5 ஆகிய உப பிரிவுகளிலும் பதிலீடு செய்யப்பட்டு இத்தால் திருத்தப்பட்டுள்ளது.

இத்திருத்தம் 1.7.1970 முதல் நடைமுறையிலிருக்கும்.

8-204

---

**சம்பளச் சபைக் கட்டளைச் சட்டம்**

**அறிவித்தல்**

(136 ம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைக் கட்டளைச் சட்டத்தின் 9 ம் பிரிவின்படி கனம் தொழில் அமைச்சர் அவர்கள் தொழிற் சம்பளச் சபையில் பின்வரும் நியமனங்களை மகிழ்ச்சியுடன் செய்துள்ளாரென, 1943 ம் ஆண்டுச் சம்பளச் சபை ஒழுங்குவிதிகளின் 26 ம் ஒழுங்கு விதியின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

(1) மெத்தைத் தும்பு, சிலிர்த்த தும்பு ஏற்றுமதித் தொழிற் சம்பளச் சபையில் தொழிலாளர்களின் பிரதிநிதியாக இருந்து காலஞ் சென்ற திரு. கே. குலவீரசிங்கம் என்பவருக்குப் பதிலாக திரு. எம். சீ. எம். ஷாபீ என்பவர்.

(2) தேயிலை ஏற்றுமதித் தொழிற் சம்பளச் சபையில் தொழிலாளர்களின் பிரதிநிதியாகவிருந்த காலஞ் சென்ற திரு. கே. குலவீரசிங்கம் என்பவருக்குப் பதிலாக திரு. என். சண்முகதாசன் என்பவர்.

ஏ. இ. கோகலி மொரகொட,
பதில் நிரந்தரச் செயலாளர்,
தொழில் அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு யூலை மீ 27 ந் ஷ.

8–55

---

**சம்பளச் சபைக் கட்டளைச் சட்டம்**

**அறிவித்தல்**

(136 ம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைக் கட்டளைச் சட்டத்தின் 9 ம் பிரிவின்படி, கனம் தொழில் அமைச்சர் அவர்கள் பின்வரும் நியமனங்களைச் செய்துள்ளாரென்று, 1943 ம் ஆண்டின் சம்பளச் சபை ஒழுங்கு விதிகளின் 26 ம் ஒழுங்கு விதியின்படி இத்தால் அறிவிக்கப்படுகிறது.

(1) தேயிலை வளர்த்தலும் பதப்படுத்தலும், இறப்பர் வளர்த்தலும் பதப்படுத்தலும் தொடர்பாய தொழில்களுக்குரிய சம்பளச் சபைகளில் வேலைக்கமர்த்துபவர்களின் பிரதிநிதியாயிருந்து தாமாக விலகிய திரு. எஸ். கே. டீ. ஜயமான்ன என்பவருக்குப் பதிலாக திரு. ரீ. ஆர். ஆர். விஜேவிக்கிரம.

(2) தேயிலை வளர்த்தலும் பதப்படுத்தலும் தொடர்பாய தொழிற் சம்பளச் சபையில் வேலைக்கமர்த்துபவர்களின் பிரதிநிதியாயிருந்து தாமாக விலகிய திரு. கே. ஜே. இரத்வத்த என்பவருக்குப் பதிலாக திரு. எப். டீ. சி. விஜேசிங்க.

(3) இறப்பர் வளர்த்தலும் பதப்படுத்தலும் தொடர்பாய தொழிற் சம்பளச் சபையில் வேலைக்கமர்த்துபவர்களின் பிரதிநிதியாயிருந்து தாமாக விலகிய திரு. எஸ். ஜே. சல்காது என்பவருக்குப் பதிலாக திரு. எப். டீ. சி. விஜேசிங்க.

ஏ. ஈ. கொகாலி மொரகொட,
பதில் நிரந்தரச் செயலாளர்,
தொழில் அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு யூலை மீ 27 ந் ஷ.

8–56

---

**சம்பளச் சபைக் கட்டளைச் சட்டம்**

**அறிவித்தல்**

(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைக் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின்படி தனக்களிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, மேசு வகை உற்பத்தித் தொழிற் சம்பளச் சபை, இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டவாறு, அவ்வட்டவணையிற் குறிக்கப்பட்ட தீர்மானங்களை மாற்ற உத்தேசிக்கிற தென்று மேற்கூறிய கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இத்தால் அறிவிக்கின்றது.

மேற்கூறிய உத்தேசத்திற்கு ஆட்சேபனைகள் 1970 ஆம் ஆண்டு ஆகஸ்ற் மாதம் 21 ஆந் தேதி பகல் 12 மணி வரைக்கும் இச் சபையின் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனையொவ்வொன்றும் அவ்வண்ணம் ஆட்சேபித்தற்கான நியாயங்களைக் கொண்டதாய் எழுத்தில் தெரிவிக்கப்படல் வேண்டும்.

டப்ளியூ. எல். பீ. த மெல்,
தலைவர்,
மேசு வகை உற்பத்தித்
தொழிற் சம்பளச் சபை.

கொழும்பு,
1970 ஆம் ஆண்டு யூலை மாதம் 26 ஆந் தேதி.

**அட்டவணை**

மேசு வகை உற்பத்தித் தொழிற் சம்பளச் சபையினல் ஆக்கப்பட்டு, 1966 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 9 ஆந் தேதியன்று வெளிவந்த 14,725 ஆம் இலக்க அசாதாரண வர்த்தமானியிலும், 1968 ஆம் ஆண்டு சனவரி மாதம் 21 ஆந் தேதி வெளிவந்த 14,785/5 ஆம் இலக்க அசாதாரண வர்த்தமானியிலும் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல்களினகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்ட தீர்மானங்கள், அவ்வட்டவணையின் இறுதியில் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலம் மேலும் மாற்றப்படுதல் வேண்டும்.

வருடாந்த விடுமுறைகள் (25 ஆம் பிரிவு).

1. (இதனகத்துப் பின்னர் "தகுதிப்படுத்தும் ஆண்டு" எனப்படும்) எவ்வாண்டிலாவது 218 நாட்களுக்கு அதிகமாக ஒரே முதலாளியின் கீழ் வேலையாளர் ஒருவர் தொடர்ச்சியாக வேலை செய்திருப்பின் நேரடுத்துவரும் ஆண்டில் 218 நாட்களுக்கு அதிகமாக அவ்வேலையாளர் வேலை செய்த ஒவ்வொரு பூரண 4 நாட்களுக்கும் ஒரு விடுமுறை வீதம் கணக்கிட்டு அவருக்கு ஒரு விடுமுறை அல்லது விடுமுறைகள் கொடுக்கப்படவேண்டும்.

ஆயினும், 274 நாட்களுக்கு மேலதிகமாகவுள்ள எக்காலத்திற்கும் அத்தகைய விடுமுறையெதையும் கொடுக்கக் கடமைப்பட்டவரல்லர்.

இப்பந்தியில், "வேலையாளர் வேலை செய்த நாட்கள்" என்பது பின்வருவனவற்றை உட்படுத்தும்—

(அ) கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் எவ்வாண்டிலாயினும் (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் பிரகாரம் முதலாளி வேலையாளருக்குக் கொடுத்த விடுமுறையொவ்வொன்றும் ;

(ஆ) முதலாளி அங்கீகரித்துள்ள எக்காரணங்கள் குறித்தும் வேலைக்குச் செல்லாத நாளொவ்வொன்றும் ;

(இ) தமது வேலை காரணமாகவும் தமது வேலையின் போதும் ஏற்பட்ட ஒரு விபத்தின் விளைவாக வேலையாளருக்கு நேர்ந்துள்ள யாதாயினும் காயத்தின் பொருட்டு வேலைக்குச் செல்லாத நாளொவ்வொன்றும் ;

(ஈ) (139 ஆம் அத்தியாயமாகிய) தொழிலாளர் நட்டஈட்டுச் சட்டத்தின் III ஆம் அட்டவணையிற் குறிக்கப்பட்டுள்ள தொழிலின் பயனுக யாதாயினும் நோய் காரணமாக வேலைக்குச் செல்லாத நாளொவ்வொன்றும் ;

(உ) முதலாளி வேலையாளருக்கு வேலை கொடுக்கத் தவறும் நாளொவ்வொன்றுக்கும் ;

(ஊ) சட்ட விரோதமற்றதும் 30 நாட்களுக்கதிகமாக தொடர்ந்து நடைபெறுவதுமான வேலை நிறுத்தமொன்றின் அல்லது கதவடைப்பின் காரணமாக வேலைக்குச் செல்லாத நாளொவ்வொன்றும்.

ஆனால், 24 ஆம் பிரிவின்படி வாராந்தர விடுமுறையாக நியமிக்கப்பட்ட நாளை உட்படுத்தாது.

2. (i) வேலையாளரொருவருக்குரிய விடுமுறைகளின் தொகை ஏழுக்கு மேற்படாதிருப்பின், அவ்வேலையாளருக்கு அவ் விடுமுறைகள் தொடர்ச்சியாகக் கொடுக்கப்படவேண்டும் ; அவர் அவற்றைத் தொடர்ச்சியாக எடுத்தல் வேண்டும்.

(ii) வேலையாளரொருவருக்கு உரிய விடுமுறைகளின் தொகை ஏழுக்கு மேற்படின் அவருக்கு அவ்விடுமுறைகளில் ஏழு நாட்கள் தொடர்ச்சியாகக் கொடுக்கப்படவேண்டும்; அவர் அவற்றைத் தொடர்ச்சியாக எடுத்தல் வேண்டும்.

3. இரண்டாம் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய, வேலையாளர் ஒருவரும் அவரது முதலாளியும் பரஸ்பரம் சம்மதித்துக் கொள்ளும் நாட்களில் அவ் வேலையாளருக்கு விடுமுறை அல்லது விடுமுறைகள் கொடுக்கப்படுதல் வேண்டும்.

4. ஒவ்வொரு விடுமுறைக்கும் வேலையாளரொருவருக்குக் கொடுக்கப்படவேண்டிய வேதனம், தகுதிப்படுத்தும் ஆண்டின் கடைசி 60 நாட்களில் அவர் உண்மையாக வேலை செய்த நாட்களுக்கு அவர் சம்பாதித்த (மேலதிக நேரச் சம்பளமும் நன்கொடைகளும் ஒங்கலான) மொத்தச் சம்பளத்தை வேலை செய்த அந்நாட்களின் தொகையால் பிரிக்க வரும் சராசரி நாளாந்தரச் சம்பளமாகும்.

5. வேலையாளரொருவருக்கு அவரது விடுமுறைக்கு அல்லது விடுமுறைகளுக்குரிய வேதனம் அவ்விடுமுறைக்கு அல்லது அவ் விடுமுறைகளுக்கு முன்கொடுக்கப்படவேண்டும். ஆனால் அவ்விடுமுறைக்கு அல்லது அவ்விடுமுறைகளுக்கு முன் ஏழு நாட்களுக்கு முற்படாமல் கொடுக்கப்படவேண்டும்.

8-99

---

## பௌத்த அறநிலையங்கள் கட்டளைச் சட்டம்

(318 ஆம் அத்தியாயமான) பௌத்த அறநிலையங்கள் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவிற் குறிப்பிடப்பட்ட ஆலோசனைச் சபைக்கு வழக்குரைஞர் வால்ர விமலச்சந்திர அவர்களை இதன் தேதியிலிருந்து ஐந்தாண்டு காலத்திற்கு உறுப்பினராக இருப்பதற்கென மாண்புமிகு நீதியமைச்சர், மேற்படி கட்டளைச் சட்டத்தின் 6 (1) ஆம் பிரிவின்கீழ் மகிழ்வுடன் நியமித்துள்ளாரென, பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

நிகால் ஜெயவிக்கிரம,
நீதியமைச்சின் நிரந்தரச் செயலாளர்.

நீதியமைச்சு,
கொழும்பு,
1970 யூலை 24 ஆந் நாள்.

8-61

---

## கொழும்பு மாவட்டத்திலுள்ள இம்புல்கொட பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவிலுள்ள சியனேகோறளே மேற்கு, மெதபத்துவவிலுள்ள இல. 293 வத்துறுகம கிராம சேவையாளர் பிரிவு, நித்தம்புவ பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவிலுள்ள சியனே கோறளே கிழக்குடன் சேர்க்கப்படுதல்

1970 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 1 ஆம் திகதி கொழும்பு மாவட்டத்திலுள்ள இம்புல்கொட பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவிலுள்ள சியனே கோறளே மேற்கு மெதபத்திலுள்ள 293 ஆம் இலக்கமுள்ள வத்துறுகம கிராமசேவையாளர் பிரிவு, நித்தம்புத பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவு—சியனே கோறளே கிழக்குடன் சேர்க்கப்பட்டுள்ளதென இத்தால் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

2. இப்புதிய கிராமசேவையாளர் பிரிவின்மேல் ஆணைசெலுத்தும் நீதவான் கோடும், கிராமக் கோடும், பொலீஸ் நிலையமும் இப்புதிய பிரிவை உள்ளடக்கிய பிறப்பு, இறப்பு விவாகப் பதிவாளர் பிரிவு, தேர்தல் தொகுதியும் உள்ளூராட்சிச் சபையும் பொது அறிவித்தலுக்காகக் கீழே தரப்பட்டுள்ளன.

நீதவான் கோடு : கம்பஹா.

கிராமக் கோடு : முதுன்கொட.

பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுப் பிரிவு : உறுவல் பேருவ.

உள்ளூராட்சிச் சபை : உறுவல் பேருவ கிராமசபை.

தேர்தல் தொகுதி : தோம்பே—இலக்கம் 15.
பொலீஸ் நிலையம் : கிருந்திவேல.

பி. மகாதேவ,
நிரந்தரச் செயலாளர்,
பொது நிருவாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.

பொது நிருவாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,
கொழும்பு 7,
1970 யூலை மாதம் 26 ஆம் தேதி.

8-104

---

## இணக்கச் சபைகள் சட்டம்

### 3 (2) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

1959 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தினுல் திருத்தப்பட்டவாறுள்ள 1946 ஆம் ஆண்டின் இலங்கை (அரசியலமைப்பு) அரசப் பேரவைக் கட்டளையின் 47 (2) ஆம் பிரிவின் கீழாக்கப்பட்டு, 1970 யூன் 16 ஆந் தேதிய 14,910/8 ஆம் இலக்க அதி விசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1965 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தினுல் திருத்தப்பட்டவாறுள்ள, 1958 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (2) உட்பிரிவின் ஏற்பாடுகளைப் பின்பற்றி, நீதி அமைச்சரின் பாராளுமன்றச் செயலாளர், இரத்தினசிறி விக்கிரமநாயக்க ஆகிய யான், இதற்குள்ள அட்டவணையிற் குறிப்பிட்டுள்ள இடப்பரப்பு ஒவ்வொன்றுக்கும் இணக்குவோர் குழாம் ஒவ்வொன்றினை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது எனவும், அத்தகைய இடப்பரப்பு ஒவ்வொன்றினதும் இணக்குவோர் குழாத்துக்கு நியமிக்கப்பட வேண்டிய ஆட்களைப் பற்றி 1970, செத்தம்பர் 30 ஆந் நாள் அல்லது அதற்கு முன்னர் அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழான விதப்புரைகள், பெரும்பாக அரசிறை அலுவலரின் அலுவலகத்திற் பெற்றுக்கொள்ளக்கூடிய படிவத்தில் எழுத்தில் எனக்குச் செய்யப்படலாமெனவும் இத்தால் அறிவிக்கின்றேன்.

இ. விக்கிரமநாயக்க,
நீதி அமைச்சரின் பாராளுமன்றச்
செயலாளர்.

நீதி அமைச்சு,
கொழும்பு, 1970 யூலை 30 ஆந் நாள்.

அட்டவணை

1. கொழும்பு மாவட்டத்திலுள்ள கெனரத்கொடைக் கிராமப் பகுதி.
2. கொழும்பு மாவட்டத்திலுள்ள மாம்பே கெஸ்பேவ கிராம சபைப் பகுதி.
3. களுத்துறை மாவட்டத்திலுள்ள பாணந்துறை நகரசபைப் பகுதி.
4. கண்டி மாவட்டத்திலுள்ள கடுகனுவை நகரசபைப் பகுதி.
5. கண்டி மாவட்டத்திலுள்ள மெத பலாத யட்டிநுவர கிராமப் பகுதி.
6. கண்டி மாவட்டத்திலுள்ள கந்துபலாத யட்டிநுவர கிராமப் பகுதி.
7. நுவரேலியா மாவட்டத்திலுள்ள நானுஓயா கிராமப் பகுதி.
8. நுவரேலியா மாவட்டத்திலுள்ள கந்தப்பளைக் கிராமப் பகுதி.
9. பதுளை மாவட்டத்திலுள்ள ஊவபரணகமைக் கிராமப் பகுதி.
10. பதுளை மாவட்டத்திலுள்ள யட்டி பலாத கிராமப் பகுதி.
11. பதுளை மாவட்டத்திலுள்ள வெலிமடை பட்டினசபைப் பகுதி.
12. பதுளை மாவட்டத்திலுள்ள கெப்பெட்டிபொலக் கிராமப் பகுதி.
13. அனுராதபுர மாவட்டத்திலுள்ள உதுறு கலாகம் கோரளைக் கிராமப்பகுதி.
14. இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள குறுவிற்ற கோரளை மெத பத்துக் கிராமப் பகுதி.
15. இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள குறுவிற்ற கோரளை பல்லே பத்துக் கிராமப் பகுதி.
16. குருநாகல் மாவட்டத்திலுள்ள மடகபொலக் கிராமப் பகுதி.
17. காலி மாவட்டத்திலுள்ள பறகொடைக் கிராமப் பகுதி.
18. மாத்தறை மாவட்டத்திலுள்ள பொலபனுதரக் கிராமப் பகுதி.
19. திருகோணமலை மாவட்டத்திலுள்ள குறிஞ்சக்கேணிக் கிராமப் பகுதி.
20. காலி மாவட்டத்திலுள்ள வந்துரம்பைக் கிராமப் பகுதி.
21. காலி மாவட்டத்திலுள்ள வத்தேகமைக் கிராமப் பகுதி.
22. காலி மாவட்டத்திலுள்ள தெலிகடை—மாஜுமானைக் கிராமப் பகுதி.
23. காலி மாவட்டத்திலுள்ள கொட்டவைக் கிராமப் பகுதி.
24. காலி மாவட்டத்திலுள்ள பொல்பாகொடைக் கிராமப் பகுதி.

8-231

இல. 543 இ.141 டி (பகுதி VII)

இதனகத்துள்ள பட்டோலேயின் I ஆம் பத்தியில் தரப்பட்டுள்ள பதவிகள் ஒவ்வொன்றையும், அப்பட்டோலேயின் II ஆம் பத்தியில் நேரொத்த பதிவில் தரப்பட்டுள்ள திணைக்களத்தில் வகிக்கும் ஒவ்வொருவரும், அத்தகைய பதவிக்கு அவர் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து உபகாரச்சம்பளத்துக்குத் தகவுடையவராவாரென உபகாரச் சம்பளப் பிரமாணக் குறிப்புக்களின் II ஆம் பிரிவின் பிரகாரமும் சொல்லப்பட்ட பிரமாணக் குறிப்புக்களின் ஏற்பாடுகளுக்கமையவும் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

பொது நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,
கொழும்பு, 1970 ஆண்டு யூலை மீ 23 ந் ௳.

பி. மகாதேவா,
பொது நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள்
அமைச்சின் நிரந்தரச் செயலாளர்.

பட்டோலே

| பத்தி I | பத்தி II |
|---|---|
| சிறு விலங்குத் தோலும், பெருவிலங்குத் தோலும் திருத்தும் உத்தியோகத்தர்<br>கோட்டவிலங்கு மருத்துவ உத்தியோகத்தர்கள்<br>படம் வரைவு அலுவலக உதவியாளர் ;<br>கமத்தொழிற் பொருளியலாளர் I ஆந் தரமும் II ஆந் தரமும் | கமத்தொழில் திணைக்களம் |
| பிரதிப்பணிப்பாளர் விலேமதிப்பிடற் கிளை (1969.10.1 ஆந் தேதி முதல்) .. | கைத்தொழில், கடற்றொழில் அமைச்சு |
| நூல்நிலேய உதவியாளர் (நிர்வாகப் பயிற்சிப் பகுதி) .. | பொதுத் திறைசேரி |
| ஏற்றியிறக்கல் உத்தியோகத்தர் .. | நில அளவைத் திணைக்களம் |
| அலுவலக அலுவல் உதவியாளரும் சைக்கிள் ஏவலாளரும்,<br>குருடர்களுக்கான மறுசீரமைப்பு, பயிற்சி நிலேயம், வத்தேகம | சமூகசேவைத் திணைக்களம் |
| கள எழுதுவினைஞர் (1957.10.1 ஆந் தேதி முதல் 1969.9.30 ஆந் தேதிவரை) .. | அரசாங்கக் கட்டுவேலேத் திணைக்களம் |
| கள எழுதுவினைஞர் (1969.10.1 ஆந் தேதி முதல்) .. | பெருந்தெருக்கள் திணைக்களம் |
| கேட்டல், காண்டல் உதவியாளர்கள் கனிட்ட பல்கலேக்கழகங்கள் ;<br>கேட்டல், காண்டல் உதவியாளர்கள் திரைப்படப் பகுதி ; பதிப்பாசிரியர்கள்—கனிட்ட பல்கலேக் கழகங்கள்; பண்ணை முகாமையாளர்கள்; கனிட்ட பல்கலேக்கழகங்கள்;<br>கைப்பணி செயல்முறை காட்டுவோர்; தொழில்நுட்பக் கல்வி நிலேயங்கள்;<br>போதனாசிரியர், I ஆந் தரம் (இரசாயனவியல்) இலங்கைத் தொழில்நுட்பவியற் கல்லூரி (1967.5.20 ஆந் தேதி முதல் திருவாட்டி எல். சிவகுருநாதன் அவர்கள் வகிக்கும் மட்டும் | கல்வி, அமைச்சு |
| தொடர்பிணைப்பு உத்தியோகத்தர், I ஆந் தரம் (1967.10.1 ஆந் தேதி முதல்) .. | சிவில் விமானப்போக்குவரத்துத் திணைக்களம் |
| தொழில் நுட்ப உதவியாளர் (பாதுகாத்தல்) .. | தொல்பொருளியல் திணைக்களம் |
| பிசுக்கால் சேவகர் (28 பதவிகள்) (1969.10.1 ஆந் தேதி முதல்) .. | பிசுக்கால் திணைக்களம் |
| ஐக்கிய நாட்டு பன்னாட்டுக் குழந்தைகளின் அவசரகால நிதி பால்மா, பண்டசாலேக்காப்பாளர் | சௌக்கியத் திணைக்களம் |
| மொழிபெயர்ப்பாளர் (தற்காலிகம்) (திரு. டபிள்யூ. எஸ். என். பீ. பர்ணந்து அவர்கள் வகிக்கும் மட்டும்) | அரசகரும மொழித் திணைக்களம் |

—60

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## கால் நடைகளுக்கு குறிசுடல்—திருகோணமலே மாவட்டத்தில் குச்சவெளி பி. கா. பிரிவு

19.11.1962 திகதி 13,406 இலக்க இலங்கை அரசாங்க அதி விஷேச வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட 1958 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலங்குகள் சட்டத்தின் ஒழுங்கு விதிகளின் இரண்டாம் பாகத்தில் கூறிய 12 ம் விதியின் III ம் உபவிதியின்படி 1969/70 ம் ஆண்டில் திருக்கோணமலே மாவட்டத்தில் குச்சவெளி பி. கா. பிரிவில் உள்ள கால் நடைகளுக்கு குறிசுடப்படும் விபரம் கீழ் தரப்பட்டுள்ளது.

கச்சேரி, திருகோணமலே,
1970/4 ந் ஆண்டு ஜூலே மீ 23 ந் ௳.

டபிள்யு. எல். பர்ணந்து,
திருகோணமலே மாவட்ட அரசாங்க அதிபர்.

| கி. சே. பகுதி இல. | கி. சே. பகுதியின் பெயர் | குறிசுடப்படும் இடம் | திகதி |
|---|---|---|---|
| தி. 241 | நிலாவெளி | மாரியம்மன் கோவில், நிலாவெளி | 15. 8.70—19 .8.70 |
| ஷை | ஷை | பி. சிவசம்புவின் காணி நிலாவெளி | 20. 8.70—24. 8.70 |
| ஷை | ஷை | எம். காசிப்பிள்ளேயின் காணி, 2ம் வட்டாரம், நிலாவெளி | 25. 8.70—29. 8.70 |
| ஷை | ஷை | பசுபதி நாகராஜாவின் மாட்டுப் பட்டி | 30. 8.70— 3. 9 70 |
| ஷை | ஷை | ஜே. எம் செரிபுடைய காணி, 1ம் வட்டாரம், நிலாவெளி | 4 9.70, 8. 9.70 |
| ஷை | ஷை | எம். தாகீர் மீராமுகைதீனுடைய காணி, 1ம், வட்டாரம், நிலாவெளி | 9. 9.70, 13. 9 70 |
| ஷை | ஷை | எஸ் நல்லதம்பியுடைய காணி, கோபாலபுரம், நிலாவெளி | 14. 9.70, 18. 9.70 |
| ஷை | ஷை | வாழையூத்து தோட்டம், இறக்கக்கண்டி | 19. 9.70, 23. 9.70 |
| தி.240 | கும்புறுப்பிட்டி | கிராம சேவகர், அலுவலகம் | 15. 8.70—19. 8.70 |
| ஷை | ஷை | பிள்ளேயார் கோவில் கும்புறுப்பிட்டி | 20. 8.70—24. 8.70 |
| ஷை | ஷை | ஆர். சி. கோவில், கும்புறுப்பிட்டி | 25. 8.70—29. 8.70 |
| ஷை | ஷை | சமார குளம், கும்புறுப்பிட்டி | 30. 8.70— 3. 9.70 |
| ஷை | ஷை | மடுவ குளம், கும்புறுப்பிட்டி | 4. 9.70— 8. 9.70 |
| ஷை | ஷை | பத்தினியம்மாள் கோவில் கும்புறுப்பிட்டி | 9. 9.70—13. 9.70 |
| தி.239 | குச்சவெளி | இறணைக்கேணிகராச்சி, குச்சவெளி | 14. 9.70—18. 9.70 |
| ஷை | ஷை | கராச்சி, 4ம் வட்டாரம், குச்சவெளி | 19. 9.70—23. 9.70 |
| தி.237 | திரியாய் | திரியாய் கிராமச்சபையின் முன்னுள்ள காணி | 15. 8.70, 19. 8.70 |
| ஷை | ஷை | கராச்சி வெளிபட்டி, திரியாய் | 20. 8.70, 24. 8.70 |
| ஷை | ஷை | கஉறயாவெளிப்பட்டி | 25. 8.70, 29. 8.70 |
| தி.236 | புல்மோட்டை | வெத்திலே கேணி கராச்சி, புல்மோட்டை | 15. 8.70, 19. 8.70 |
| ஷை | ஷை | மூதண்டன்குளம், புல்மோட்டை | 20. 8.70, 24. 8.70 |
| ஷை | ஷை | இறமனத்தன் குளம் பட்டி | 25. 8.70, 29. 8.70 |
| ஷை | ஷை | கோகிலேவீதி கராச்சி, புல்மோட்டை | 30.8.70, 3. 9.70 |
| தி234 | தென்னேமரவாடி | கி. சே. அலுவலகம், தென்னேமரவடி | 15. 8.70 |
| தி.236எ | மரணமதவாச்சி | விஜயரட்ணத்தின் கடை, முன்னுள்ள பகுதி | 15. 8.70 |

8—46

## கூட்டுறவுச் சங்கங்களைக் கலைத்தல்

### நடவடிக்கைகளைப் பூர்த்திசெய்தல்

கூட்டுறவுச் சங்கங்களின் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 124) கூட்டுறவுச் சங்கங்களின் கட்டளைச் சட்டத்தின் 52 (2) வது பிரிவின் பிரகாரம் கீழே தரப்படும் சங்கங்களை நேரே குறிக்கப்படும் திகதிகளில் கலைப்பதற் கான அறிவித்தல் இத்தால் தரப்படுகிறது :—

| | சங்கத்தின் பெயர் | கலைக்கப்பட்ட நாள் |
|---|---|---|
| 1. | மட்டுப்படுத்தப்படாத மினிப்பே கூட்டுறவு கடனுதவு சங்கம் .. .. .. | 23.3.1970 |
| 2. | மட்டுப்படுத்தப்பட்ட தாழ்வுப்பாடு அர்ச். மவுண் காமல் கொண்வென்ட் பெண்கள் கோழி வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கம் .. .. | 25.3.1970 |
| 3. | மட்டுப்படுத்தப்பட்ட குச்சவெளி ஹைதாயத்தல் கூட்டுறவு நல்வாழ்வுச் சங்கம் .. .. | 18.4.1970 |
| 4. | மட்டுப்படுத்தப்பட்ட பெரியநாவற்குளம் கூட்டுறவுப் பண்டசாலைச் சங்கம் .. .. | 3.6.1970 |
| 5. | மட்டுப்படுத்தப்பட்ட சொருவில் மில்லான புதுவில் இளவிவசாயிகள் கூட்டுறவு விவசாயச் சங்கம் .. | 5.6.1970 |
| 6. | மட்டுப்படுத்தப்பட்ட கியாந்துவ கிழக்கு கூட்டுறவு பாற்பண்ணைச் சங்கம் .. .. | 10.6.1970 |
| 7. | மட்டுப்படுத்தப்பட்ட இலுக்குப்பிட்டியா கூட்டுறவுப் பண்டசாலைச் சங்கம் .. .. | 10.6.1970 |
| 8. | மட்டுப்படுத்தப்பட்ட வாலாலியாட்ட கொஸ்பெலாவட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் .. | 13.6.1970 |
| 9. | மட்டுப்படுத்தப்பட்ட பிட்டிப்பான வீடியா அர்ச். றீட்டா மீன் உற்பத்தியும் விற்பனவும் கூட்டுறவுச் சங்கம்.. | 15.6.1970 |
| 10. | மட்டுப்படுத்தப்பட்ட சியபலாபிட்டிய காமினி கூட்டுறவுப் பண்டசாலைச் சங்கம் .. .. | 15.6.1970 |
| 11. | மட்டுப்படுத்தப்பட்ட பொலநறுவை தயச பிரேமி இள விவசாயிகள் கூட்டுறவு விவசாய சங்கம் .. | 15.6.1970 |
| 12. | மட்டுப்படுத்தப்பட்ட பிட்டிப்பான அர்ச். செபஸ்தியான் மீன் உற்பத்தியும் விற்பனவும் கூட்டுறவுச் சங்கம்.. | 16.6.1970 |
| 13. | மட்டுப்படுத்தப்பட்ட பிட்டிப்பான காமினி மீன் உற்பத்தியும் விற்பனவும் கூட்டுறவுச் சங்கம் .. | 16.6.1970 |
| 14. | மட்டுப்படுத்தப்பட்ட அர்ச். ஜோன் எப். ஆக் மீன் உற்பத்தியும் விற்பனவும் கூட்டுறவுச் சங்கம் .. | 16.6.1970 |
| 15. | மட்டுப்படுத்தப்பட்ட அளுத்குறுவ அர்ச். யோசேப் மீன் உற்பத்தியும் விற்பனவும் கூட்டுறவுச் சங்கம் .. | 16.6.1970 |
| 16. | மட்டுப்படுத்தப்பட்ட பிட்டிப்பான வீடியா மதுகுமாரி மீன் உற்பத்தியும் விற்பனவும் கூட்டுறவுச் சங்கம்.. | 16.6.1970 |
| 17. | மட்டுப்படுத்தப்பட்ட போகாஸ்குபுற குலங்காஞ சிக்கனமும் சேமிப்பும் கூட்டுறவுச் சங்கம் .. | 20.6.1970 |
| 18. | மட்டுப்படுத்தப்பட்ட ஹென்டியாகலை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் .. .. | 20.6.1970 |
| 19. | மட்டுப்படுத்தப்பட்ட தலகேனு பாத்திமா மீன் உற்பத்தியும் விற்பனவும் கூட்டுறவுச் சங்கம் .. | 25.6.1970 |
| 20. | மட்டுப்படுத்தப்பட்ட பிட்டிப்பான அர்ச். கிரிஸ்டோபர் மீன் உற்பத்தியும் விற்பனவும் கூட்டுறவுச் சங்கம்.. | 25.6.1970 |
| 21. | மட்டுப்படுத்தப்பட்ட பிட்டிப்பான தெற்கு பாத்திமா மீன் உற்பத்தியும் விற்பனவும் கூட்டுறவுச் சங்கம்.. | 25.6.1970 |
| 22. | மட்டுப்படுத்தப்பட்ட பிட்டிப்பான அனுரா மீன் உற்பத்தியும் விற்பனவும் கூட்டுறவுச் சங்கம் .. .. | 25.6.1970 |
| 23. | மட்டுப்படுத்தப்படாத கம்பெக்கமுவ சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் .. .. | 25.6.1970 |
| 24. | மட்டுப்படுத்தப்பட்ட தெடகமுவ விவசாய குடியேற்றப் பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் .. | 25.6.1970 |
| 25. | மட்டுப்படுத்தப்பட்ட கிலோங் தோட்டம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் .. .. | 25.6:1970 |
| 26. | மட்டுப்படுத்தப்பட்ட ஹல்பொல கூட்டுறவுப் பண்டசாலைச் சங்கம்.. .. .. | 29.6.1970 |

ஆர். பி. ராஜகுரு,
பிரதி கூட்டுறவு ஆக்க ஆணையாளரும்
பிரதி கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்.

கூட்டுறவுத் திணைக்களம்,
த. பெ. இல. 419,
கொழும்பு—1,
1970.7.27.

8–52

---

## மக்கள் வங்கி—அரசாங்க லிகிதர் சேவைச் சங்கக் கட்டடம் சேர் சிற்றம்பலம் காடினர் மாவத்தை—கொழும்பு 2

### 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச்சட்டம் 73 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

மக்கள் வங்கியின் இயக்குநர் சபைத் தலைவரான ஹெக்டர் அபே வர்த்தன ஆகிய நான், 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரகாரம் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைக் கொண்டு இத்துடனுள்ள அட்டவணையிற் தரப்படும் உரிமையாக்கற் கட்டளையின் மூலம் மக்கள் வங்கியால் உரிமையாக்கப்பெற்ற இடங்கள் எதினிலேனும் எவருக்காவது உரிமையிருப்பின் சொல்லப்பட்ட 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் கீழ், அவர்களுக்கு கிடைக்க வேண்டிய நட்டஈட்டுத் தொகை முழுவதற்கு அல்லது ஏதேனும் பகுதிக்குரிய உரிமைகளைக் கொழும்பு 2 இல் பாக் வீதியில், 48 ஆம் இலக்கத்திலுள்ள மக்கள் வங்கியின் காணி மீளற் பகுதியிலிருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய படிவங்களில் 1970 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7 ஆந் திகதியிலிருந்து ஒரு மாதத்தினுள் விண்ணப்பிக்கும்படி இத்தால் அறிவிக்கின்றேன்.

உரிமை விண்ணப்பங்கள் இதற்காகவுள்ள படிவங்களில், மும்பிரதிகளில், எழுதப்பட்டு மக்கள் வங்கி இயக்குநர் சபைத் தலைவர், அரச்ாங்க லிகிதர் சேவைச் சங்கக் கட்டடம், சேர் சிற்றம்பலம் காடினர் மாவத்தை, கொழும்பு 2 என்ற விலாசத்துக்கு அனுப்பப்படல் வேண்டும்.

எச். அபேவர்த்தன,
தலைவர்,
மக்கள் வங்கி இயக்குநர் சபை.

1.7.1970.
கொழும்பு.

#### அட்டவணை

26.3.1970 திகதியிடப்பட்ட 14,899/1 இலக்கத்தைக் கொண்ட இலங்கை அரசாங்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையிற் பிரசுரிக்கப்பட்ட உரிமையாக்கற் கட்டளை இல. 20.

8-194

**அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய புதிய இரய விகிதங்கள்**
**1.12.1968 தொடங்கி அமுலுக்கு வந்தது**

## இலங்கை அரசாங்க வர்த்தமானி (கெசற்)

**வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. பேரயா தினத்திற்கு முந்திய நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும் மற்றும் நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 4.30 மணிவரையும் காரியாலய நேரமாகும்.

4. பேரயா தினத்திற்கு முந்திய நாட்களில் நண்பகல் 12 மணிக்கும், மற்றும் நாட்களில் பி. ப. 3.30 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. நகலை கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக ரைப் அடித்தல் பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம்பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்படவேண்டிய விளம்பரங்கள் "சுப்பிறீம் கோட் புறொக்ராறல்" கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட இரய விகிதங்கள் 1968 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 1 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய .. .. | 20 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன பகுதி .. | 20 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ¼ பக்கம் .. .. | 220 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் .. .. | 440 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் இரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. 1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 1 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. சந்தா விபரம் 1.12.68 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.

| அரசாங்க வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் | | | வெளியூர் | |
|---|---|---|---|---|---|
| | ரூ. | ச. | | ரூ. | ச. |
| ஒவ்வொரு பகுதியும் .. .. .. | 46 | 0 | .. | 60 | 0 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு .. .. | 36 | 0 | .. | 42 | 0 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் .. .. | 43 | 50 | .. | 51 | 50 |

ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.

தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | விலை ரூ. ச. | | தபாற் செலவு (உள்ளூர்) சதம் |
|---|---|---|---|
| (அ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் ஒவ்வொரு பகுதியும் .. | 0 50 | .. | 20 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் ஒவ்வொரு பகுதியும் .. | 1 00 | .. | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் | 0 30 | .. | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. .. .. | 0 60 | .. | 15 |

இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத்தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி 500, கொழும்பு, என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறைநாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதிநாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள' நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கவிரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர்.** தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும். **அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**அட்டவணை—1970**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|
| யூன் | 5. 6.70 | வெள்ளி | 29. 5.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 11. 6.70 | வியாழன் | 5. 6.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 18. 6.70 | வியாழன் | 11. 6.70 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | 25. 6.70 | வியாழன் | 18. 6.70 | வியாழன் | ந.ப. | 12.00 |
| யூலை | 2. 7.70 | வியாழன் | 25. 6.70 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | 10. 7.70 | வெள்ளி | 2. 7.70 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | 17. 7.70 | வெள்ளி | 10. 7.70 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| | 24. 7.70 | வெள்ளி | 17. 7.70 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| | 31. 7.70 | வெள்ளி | 24. 7.70 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| ஓகத்து | 7. 8.70 | வெள்ளி | 30. 7.70 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 14. 8.70 | வெள்ளி | 7. 8.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 21. 8.70 | வெள்ளி | 14. 8.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 28. 8.70 | வெள்ளி | 21. 8.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| செத்தெம்பர் | 4. 9.70 | வெள்ளி | 28. 8.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 11 9.70 | வெள்ளி | 4. 9.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 18. 9.70 | வெள்ளி | 11. 9.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 25. 9.70 | வெள்ளி | 18. 9.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| ஒற்ரோபர் | 2.10.70 | வெள்ளி | 25. 9.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 9.10.70 | வெள்ளி | 2.10.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 16.10.70 | வெள்ளி | 9.10.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 23.10.70 | வெள்ளி | 16.10.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 30.10.70 | வெள்ளி | 23.10.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| நவெம்பர் | 5.11.70 | வியாழன் | 30.10.70 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 12.11.70 | வியாழன் | 5.11.70 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | 20.11.70 | வெள்ளி | 12.11.70 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | 27.11.70 | வெள்ளி | 20.11.70 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| திசெம்பர் | 4.12.70 | வெள்ளி | 27.11.70 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| | 11.12 70 | வெள்ளி | 4.12.70 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| | 18.12.70 | வெள்ளி | 10.12.70 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 24.12 70 | வியாழன் | 17.12.70 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 31.12.70 | வியாழன் | 24.12.70 | வியாழன் | பி.ப. | 3.30 |

அரசாங்க அழுத்தகர் திணைக்களம்,
கொழும்பு,
**1970 ஆம் ஆண்டு மார்ச்சு மீ 5 ஆந் உ.**

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகர்.

இலங்கை அரசாங்க அழுத்தகர் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.